17.12.2024

OS No: 101/2016

DW.1 திரு. கே.என்.கண்ணப்ப சுப்பிரமணியன்

**<u>சாட்சி மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நாட்டரசன்கோட்டையைத்தவிர வேறு எந்த ஊர்களில் பூர்வீக சொத்து இருந்தது என்றால் அல்லூர், மேலூர் அருகே உள்ள தும்பைபட்டி ஆகிய ஊர்களில் எனக்கு பூர்வீக சொத்து இருந்தது. மேற்படி அல்லூர், தும்பைபட்டி ஆகிய ஊர்களில் உள்ள சொத்துக்களை விற்றுவிட்டோம் என்றால் சரிதான். எந்த வருடம் மேற்படி சொத்துக்களை நாங்கள் விற்றுவிட்டோம் என்றால் ஞாபகமில்லை. மேற்படி விற்பனை பத்திரங்களில் என்னுடைய கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. நாட்டரசன்கோட்டையில் நான் அட்டை கம்பெனி ஒன்றை நடத்திவந்தேன் என்றால் சரிதான். மேற்படி அட்டை கம்பெனி நடத்திவந்தபோது கொள்முதல் மற்றும் வரவு செலவு போன்றவற்றிற்கு எனது கையெழுத்து செய்துள்ளேன் என்றால் 15,16 வருடங்களுக்கு முன்பு செய்துள்ளேன். மேற்படி வியாபாரம் சம்மந்தமாக பல நபர்களுக்கு நான் கையெழுத்து செய்து காசோலை வழங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் பல நபர்களுக்கு கையெழுத்து செய்து காசோலை வழங்கியுள்ளேன் என்றும், தற்போது வழங்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து எனக்கு கிடைத்த அழைப்பாணையில் உள்ள என்னடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான், மேற்படி கையெழுத்து வா.சா.ஆ.7 ஆகும். எனது எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் எனது வக்காலத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். நான் கையெழுத்து செய்த ஆவணங்கள் என்னிடம் உள்ளன மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக என்னிடம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை நானே எழுதி அதில் நானே கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

R PANDY Digitally signed by R PANDY Date: 2024.12.17 17:59:14 +0530